# முதன்மை சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**PW–1 – OS. No.105/2012**

2026 ம் ஆண்டு ஜீன் மாதம் 23–ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி முதன்மை சார்பு நீதிபதி அய்யா திரு.H.முகமது அன்சாரி, அவர்களின் முன்னிலையில் திருமதி.N.ஜெயலட்சுமி கிரேடு 2 பென்ச் கிளர்க் அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் : திருமதி.மேரி வர்க்கீஸ் | தொழில் : |
| க/பெ. : திரு.வர்க்கீஸ் | வயது : 79 |
| முகவரி : | மொபைல் எண்: |

**வாதி தரப்பில் சாட்சி வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை தொடர்ச்சி.**

நான் இந்த வழக்கில் வாதி. எனது தரப்பு சாட்சிக்காக நிரூபண பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் உண்மையானவை. பிரமாண வாக்குமூலத்தை படித்துப் பார்த்து அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு வழக்குரைஞர் முன்னிலையில் கையொப்பம் செய்தேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | | |
|---|---|---|---|
| 1. | வாதியின் ஆதார் அட்டை | நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டு குறியீடு செய்யப்பட்டது) | **வா.சா.ஆ–4** |
| 2. | பிரதிவாதியின் இறப்பு சான்றிதழ் | நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டு குறியீடு செய்யப்பட்டது) | **வா.சா.ஆ–5** |
| 3. | வர்கீஸின் இறப்பு சான்றிதழ் | நகல் (ஆட்சேபனை உடன் குறியீடு செய்யப்பட்டது) | **வா.சா.ஆ–6** |
| 4. | 3 மற்றும் 4 வது பிரதிவாதிகளுக்கு எதிராக திருப்பூர் காவல் ஆணையர் அவர்களிடம் கொடுத்த புகார் மனு | நகல் | **வா.சா.ஆ–7** |
| 5. | திருப்பூர் காவல் ஆணையர் வழங்கிய புகார் மனு ஏற்பு ரசீது | அசல் | **வா.சா.ஆ–8** |

| | | | |
|---|---|---|---|
| 6. | திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு அனுப்பிய புகார் மனு RMS Booked Slip | அசல் | **வா.சா.ஆ–9** |
| 7. | மாவட்ட ஆட்சியர் அவர்கள் புகார் மனு பெற்றுகொண்டதற்கான ஆன்லைன் டெலிவரி சான்று | நகல் | **வா.சா.ஆ–10** |

ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது தரப்பு சாட்சி மற்றும் ஆவணங்களை ஏற்றுக்கொண்டு பிராது படி தீர்ப்பு அளிக்க வேண்டுமாய் கேட்டு கொள்கிறேன்.

**பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

H.Mohamed Ansari
Digitally signed by H.Mohamed Ansari
Date: 2026.06.23 17:13:14 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.